From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 154/2011

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : தனலெட்சுமி | Father/Husband Name | : கணேசன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 26.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 26day of 03.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் வஞ்சிநகரத்தில் எனது தந்தை வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும், எனது கணவர் பெயர் கணேசன். எனக்கும் எனது கணவருக்கும் 30.08.2009ல் பிராண்மலை சண்முகநாதன் திருக்கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது பெற்றோர் 25 பவுன் நகையும், ரூ.55000 ரொக்கபணமும், ரூ.120000 மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்கள் கொடுத்தார்கள். திருமணத்திற்கு பின்பு எனது கணவர் வீட்டில் 3 மாதம் வாழ்ந்தேன். அதன்பின்பு வரதட்சனண கொடுமையின் காரணமாக நான் எனது தந்தை வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்பு வழக்கறிஞரிடமிருந்து எனக்கு நோட்டிஸ் அனுப்பி 7 நாட்களுக்குள் 1ம்எதிரியுடன் வாழ வருமாறு அந்த நோட்டிஸ்ல் கூறியிருந்தது. அதன்பின்பு ஊர் பெரியவர்கள் தலையிட்டு சமாதானம் பேசி என்னை அனுப்பிவைத்தார்கள். பின்பு நான் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்று வாழ்ந்தேன். கடன் அதிகமாக இருப்பதாக சொல்லி எனது தாயார் வீட்டிலிருந்து 1ம் எதிரிக்கு போட்ட 1 பவுன் கை செயின், 1 பவுன் மோதிரம், 3 பவுன் செயின் ஆகியவற்றை அவர் விற்று 2ம் எதிரியின் கணவரான 3ம் எதிரி மற்றும் 1ம் எதிரியின் சகோதரர் 7 ம் எதிரி ஆகியோர்களுக்கு பணத்தை கொடுத்துவிட்டார். மேலும் என்னிடமிருந்து கொடுமைப்படுத்தி 5 பவுன் நகையை விற்று6ம் எதிரிக்கு

கொண்டு போய் 1ம் எதிரி கொடுத்துவிட்டார். அப்போது நான் 8 மாத கர்ப்பிணியாக இருந்தேன். அதன்பிறகும் என்னிடமிருந்து 3 பவுன் நகையை வாங்கி 1ம் எதிரி வைத்திருந்தார். அதை யாரிடம் கொடுத்தார் என்று எனக்கு தெரியவில்லை. இந்த சங்கதியை எனது கணவரின் சகோதரியின் கணவரான 3ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரிடம் சொன்னேன். அவர் என்னிடம் எனக்கு அனுவித்த 25 பவுன் நகை எங்கே என்று கேட்டார். அவர் அங்கு வைத்து என்னை தகாத வார்த்தையால் திட்டி எனது தந்தை வீட்டிற்கு போகுமாறு சொல்லிவிட்டார். இதுகுறித்து 19.10.2010ல் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதில் எனது குடும்பத்தார் அனைவரையும் விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது ).**

காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நான் 8 மாத கர்ப்பிணியாக இருந்தேன். குழந்தைக்கு ஆகும் செலவுகள் அனைத்தையும் 1ம் எதிரி பார்த்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டு அவரும் ஒப்புக்கொண்டார். ஆனால் அதன்படி அவர் நடந்துகொள்ளவில்லை. குழந்தை பிறந்து 6 மாதம் கழித்து எதிரிகள் 1 முதல் 3, 6, 7 ஆகியோர்கள் எனது தந்தை வீட்டிற்கு வந்திருந்தார்கள். அங்கு வைத்து என்னிடம் மீதமுள்ள நகையை கேட்டார்கள். நகையை நான் தர மறுத்ததால் என்னையும், எனது தந்தையும் அங்கு வைத்து அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். அது சம்மந்தமாக மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். என்னை அழைத்து விசாரித்தார்கள்.

**1 முதல் 3, 6, 7 எதிரிகள் ஆஜர்.**

**எதிரிகள் தர்ப்பில் குறுக்குவிசாரணை**

1ம் எதிரி எனது கணவர் என்றால் சரிதான். 2ம் எதிரி எனது கணவரின் அக்கா, 3ம் எதிரி 2ம் எதிரியின் கணவர், 4ம் எதிரி எனது மாமனார். 5ம் எதிரி எனது மாமியார், 6, 7 எதிரிகள் எனது கணவரின் சகோதரர். 6ம் எதிரி எனது கணவரின் பெரியப்பா சர்க்கரை சேர்வையின் மகன் ஆவார். 7ம் எதிரி எனது கணவரின் பெரியப்பா மாணிக்கத்தின் மகன் ஆவார். பட்டியல் சாட்டி 2 எனது தந்தை, 3 எனது தாயார், பட்டியல் சாட்சி 4 பரமசிவா எனது சித்தியின் கணவர், பட்டியல் சாட்சி 5 எனது உடன்பிறந்த சகோதரி, பட்டியல் சாட்சி 6 எனது உடன்பிறந்த அக்காவின் கணவரும்

எனது தாய்மாமாவும் ஆவார். நான் தற்போது பட்டியல் சாட்சி 6 கணேசனின் பராமரிப்பில் உள்ளேன் என்றால் சரியல்ல எனது தந்தை வீட்டில் வாழ்ந்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் இடையே பெரியோர்களால் நிச்சயம் செய்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான், நன்கு விசாரித்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்தின்போது எனது பெற்றோர் 25 பவுன் நகையும், ரூ.55000 ரொக்கபணமும், ரூ.120000 மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்கள் கொடுத்தார்கள் என்ற சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பணமோ, பொருளோ, நகையே கொடுத்தற்கு எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். திருமணத்தின்போது எனது பெற்றோர் 25 பவுன் நகையும், ரூ.55000 ரொக்கபணமும், ரூ.120000 மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்கள் கொடுக்கவில்லை என்றாலும் அதைபற்றி எதுவும் 1ம் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு கொடுத்திருந்தால் அதை நாங்கள் எழுதி வாக்கியிருப்போம் என்றாலும், அவ்வாறு எதுவும் கொடுக்காததால் எழுதி வாங்க பெறவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரோ, அவரது குடும்பத்தாரோ எந்த காலத்திலும் நான் கூறுவதுபோன்று வரதட்சணை எதுவும் கேட்கவில்லை என்றாலும், என்னை அடித்து துண்புறுத்தவில்லை என்றாலும் சரியல்ல,

2) என்னிடமிருந்து கொடுமைப்படுத்தி 5 பவுன் நகையை விற்று 6ம் எதிரிக்கு கொண்டு போய் 1ம் எதிரி கொடுத்துவிட்டார் என்று எனது புகார் அசாஆ 1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடமிருந்து 3 பவுன் நகையை வாங்கி 1ம் எதிரி வைத்திருந்தார் என்பதை அசாஆ 1 புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் சொல்லியுள்ளேன். அவர் யாரிடம் அந்த நகையை கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ஒரு காலமும் என்னிடம் நகையை எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சொல்லாத சங்கதி நான் தற்போது மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் அவருக்கு எனது தந்தை வீட்டில் அளித்த 1 பவுன் கைசெயின், 1 பவுன் மோதிரம், 3 பவுன் செயின் ஆகியவற்றை எனது திருமணமாகி 15 நாட்களிலேயே அந்த நகைகளை அனைத்தும் என் வசம் இருந்து அவர் வாங்கி சென்றுவிட்டார். எனது கணவருக்கு போடப்பட்ட நகையை மீண்டும் அவர் என்னிடம் கொடுத்து திருமணம்

ஆன 15 நாட்களிலேயே அவர் வாங்கி சென்று விட்டார் என்று எனது புகாரில் சொல்வில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் அனைத்தும் எனது கணவர் 01.03.2010 அன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்பே நடைபெற்றது. வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்ட பின்பு 15.03.2010ல் நாங்கள் சமரசம் பேசினோம் என்றால் சரிதான்.

3) யார், யாரை வைத்து சமரசம் பேசினோம் என்றால் எனது கணவரின் மாமா ராசமூர்த்தி, எனது தந்தை ராலிங்கம், ஆகியோர்களை வைத்து சமரசம் பேசினோம். அவர்கள் இருவரும் தற்போது உயிருடன் இல்லை. எனது தந்தை 2016ல் இறந்துபோனார், தேதி ஞாபகம் இல்லை. எனது கணவரின் மாமா ராசமூர்த்தி 2024ல் இறந்துபோனார். நான் இந்த வழக்கை 13.08.2011 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். னது கணவரின் மாமா ராசமூர்த்தி, எனது தந்தை ராலிங்கம், ஆகியோர்களை வைத்து சமரசம் பேசினோம் என்று போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்களை விசாரித்திருந்தால் நான் கூறுவது உண்மையா, பொய்யா என்று 2011ல் தெரிந்திருக்கும் என்றாலும், நான் அவர்கள் பஞ்சாயத்து பேசியது பற்றி போலீசாரிடம் சொல்லாததால் அவர்களை போலீசாரும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சங்கதியை எனது கணவரின் சகோதரியின் கணவரான 3ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரிடம் சொன்னேன் என்றும், அவர் என்னிடம் எனக்கு அனுவித்த 25 பவுன் நகை எங்கே என்று கேட்டார் என்றும், அவர் அங்கு வைத்து என்னை தகாத வார்த்தையால் திட்டி எனது தந்தை வீட்டிற்கு போகுமாறு சொல்லிவிட்டார் என்றும் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதால் இந்த சங்கதிகளை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லாமல் தற்போது இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) 19.10.2010ல் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதில் எனது குடும்பத்தார் அனைவரையும் விசாரணை செய்தார்கள் என்று புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லாமல் தற்போது இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நான் 8 மாத கர்ப்பிணியாக இருந்தேன் என்றும், குழந்தைக்கு ஆகும் செலவுகள் அனைத்தையும் 1ம் எதிரி பார்த்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டு அவரும் ஒப்புக்கொண்டார் என்றும் ஆனால் அதன்படி அவர்

நடந்துகொள்ளவில்லை என்று சொல்வதால் அதுபோன்று 1ம்எதிரி எழுதி கொடுக்கவில்லை ஒப்புக்கொள்ளவும் இல்லை என்றால் சரியல்ல. குழந்தை பிறந்து 6 மாதம் கழித்து எதிரிகள் 1 முதல் 3, 6, 7 ஆகியோர்கள் எனது தந்தை வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்றும, அங்கு வைத்து என்னிடம் மீதமுள்ள நகையை கேட்டார்கள் என்றும், நகையை நான் தர மறுத்ததால் என்னையும், எனது தந்தையும் அங்கு வைத்து அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் புகாரிலோ, போலீசார் வாக்குமூலத்தில் சொல்லாமல் தற்போது மிகைப்படுத்தி கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல.

5) என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறுவதால் அதுசம்மந்தமாக நானோ, எனது தகப்பானரோ மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோமா என்றால் இல்லை. அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறததால்தான் எங்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை, நாங்கள் மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரியல்ல. வஞ்சி நகரத்தில் எங்கள் வீடுகள் சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டுக்காரர்கள் யார், யார் என்றால் பரமேஸ்வரி, செல்வி, விஜி, இன்பவள்ளி, ஆகியோர்கள் உள்ளனர். இவர்கள் யாரையும் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறததால் தான் எனது வீட்டிற்கு அருகே உள்ளவர்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை சேர்ந்து வாழ வேண்டும் மேலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உத்தரவில் சார்பு நீதிமன்றத்தில் எனது கணவர் தாக்கல் செய்த HMOP No. 348/11 ல் சேர்ந்து வாழ சொல்லி உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் **( அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை எமசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** மேற்படி தீர்ப்பாணையில் மனு சமர்ப்பிக்கப்பட்டது 12.08.2011 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை சேர்ந்து வாழ அழைத்தார்கள் ஆனால் எனக்கு அடிப்படை வசதி கூட செய்து கொடுக்கவில்லை. நான் அந்த தீர்ப்பின்படி 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்திருந்தால் அவர் எனக்கு உண்டான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பார் என்றாலும், நான் சேர்ந்து வாழ விருப்பபடாமல் 1ம் எதிரி மீது பொய்யான குற்ற சாட்டு வைக்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 1 புகார் 13.08.2011 ல் கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். எனது கணவர் என்னை சேர்ந்து வாழ்வதற்கு அழைப்தற்கான மனுவை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் அதன் எதிர்

வினையாக நான் இந்த வழக்கின் புகாரை பொய்யாக கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6) 2 மற்றும் 3 எதிரிகள் சிவகங்கை மாவட்டம், தெக்கூர் கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். குமுட்ராம்பட்டிக்கும் தெக்கூருக்கும் இடையே 50 கி,மீ இருக்கும் என்றால் சரிதான். 2, 3 எதிரிகள் ஹோட்டல் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் சொத்துகள் அதிகம் உண்டு என்றால் எனக்கு தெரியாது. 6 மற்றும் 7 எதிரிகள் 1ம் எதிரி குடும்பத்துடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். 7ம் எதிரி பள்ளபட்டியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல அவர் சொந்த ஊர் குமுட்ராம்பட்டிதான். குமுட்ராம்பட்டி அவர் சொந்த ஊராக இருந்தார் என்றாலும் அவர் பள்ளபட்டியில்தான் வசிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பே 1ம் எதிரி சிங்கம்புணரியில் கம்யூட்டர் சென்டர் நடந்தி வந்தார் என்றால் சரிதான். குமுட்ராம்பட்டியில் அவருக்கு சொந்தமான தென்னம்தோப்பு, பம்பு செட்டும், வீடும் உள்ளதா என்றால் சரிதான். அதிலிருந்து வருமானம் வருகிறது என்றால் சரிதான். 4ம் எதிரி பொன்னுச்சாமி பம்ப் ஆப்ரேட்டராக வேலை செய்தார் என்றால் சரிதான். 1ம் எதிரியின் தாயாரின் தாயார் செல்லாயி என்பவரும் 1ம் எதிரி வீட்டாருடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவரது கணவர் அரசு உத்தியோகத்திலிருந்து இறந்துபோனார் என்றால் சரிதான். செல்லாயி பென்சன் வாங்கி கொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் 1ம் எதிரியை தனிக்குடித்தனம் நடத்த அழைத்தேன் என்றாலும், 1ம் எதிரி தனது வயதான தாய், தந்தை, பாட்டி ஆகியோர்களை பராமரிக்க கடமை இருந்ததால் அவர் தனிகுடித்தனம் வர மறுத்ததால் பொய்யாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரில் 20.10.2009ல் எனது தந்தை வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 15.03.2010ல் மீண்டும் எனது கணவர் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் திருமணம் ஆகி 3 மாதம் நான் வாழ்ந்தது இல்லை என்றாலும், 40 நாட்களிலேயே எனது தந்தை வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். 15.03.2010 ற்கு பின்பு 3 மாதம் எனது கணவருடன் வாழ்ந்திருப்பேனா என்றால் 8 மாதம் வாழ்ந்தேன். மீண்டும் திரும்ப 20.10.2010ல் எனது தந்தை வீட்டிற்கு சென்றேன்.

**( குறுக்குவிசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**